# ரூ.6000 நிவாரணத் தொகை: முதல்வர் வழங்கி தொடங்கி வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி...

மக்களுக்கு நியாயவிலைக் கடைகள் மூலமாக ரூ.6000/நிவாரணத் தொகை இன்று முதல் ரொக்கமாக வழங்கப்படு கிறது.

**நியாய விலைக் கடைமூலம் நிவாரண உதவித் தொகை!**

சென்னை மாவட்டத்தில் 13 இலட்சத்து 72 ஆயிரத்து 509 குடும்ப அட்டைதாரர் களும், திருவள்ளூர் மாவட்டத்தில் 6 இலட்சத்து 8 ஆயிரத்து 726 குடும்ப அட் டைதாரர்களும், செங்கல்பட்டு மாவட்டத் தில் 3 இலட்சத்து 12 ஆயிரத்து 952 குடும்ப அட்டைதாரர்களும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1 இலட்சத்து 31 ஆயிரத்து 149 குடும்ப அட்டைதாரர்களும் பயன்பெ றுவர். இதற்கென தமிழ்நாடு அரசால் 1486 கோடியே 93 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது.

இந்நிவாரணத் தொகை வழங்கும் பணியினை தொடங்கி வைக்கும் வித மாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேளச்சேரி, சக்தி விஜயலட்சுமி நகரில் உள்ள நியாய விலைக் கடை அருகில் ரூ.6000/ நிவாரணத் தொகையினை பயனாளிகளுக்கு வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிவாரணத் தொகையை பெற்றுக் கொண்ட பயனாளிகள் தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங் களது நன்றி யினை தெரிவித் துக் கொண்டனர்.

வெள்ள நிவாரணத் தொகை ரூ.6000/ குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டதும் அவர்களது கைபே சிக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும். வெள்ள நிவாரணத் தொகை விநியோகம் தினசரி காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரையும் மதியம் 3.00 மணி முதல் 5.00 வரை வழங்கப்படும். மாற் றுத்திறனாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் முதியோர் மற்றும் கைக்குழந்தையுடன் வரும் பெண்களுக்கு வெள்ள நிவாரணத் தொகை வழங்கப் படுவதில் முன்னுரிமை வழங்கப்படும்.

**குறைதீர் மையத்தில் முதல்வர் ஆய்வு!**

முன்னதாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நிவாரணத் தொகை வழங்கும் பணியினை தொடங்கி வைத்தப் பின் னர், நியாய விலைக் கடை அருகில் உள்ள குறைதீர் விண்ணப்பங்கள் பெறுதல் மையம் மற்றும் உதவி மையத்திற்கு சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்பி.கே. சேகர்பாபு, பெரு நகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், மருத்துவர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அசன் மௌலானா, அர விந்த் ரமேஷ், பிரபாகர ராஜா, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலா ளர் வ் தாஸ் மீனா, வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செய லாளர்எஸ்.கே. பிரபாகர்,

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன் மைச் செயலாளர் / ஆணையர் ஹர் சஹாய் மீனா, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்ந.சுப்பையன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, உள்ளாட்சி அமைப்புக ளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

இராதாபுரம் ஒன்றியம்

# ரூ.2.10 கோடி மதிப்பிலான வளர்ச்சி திட்டப்பணிகள்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை.டிச.18. நெல்லை மாவட்டம் இராதாபுரம் ஒன்றியம் இராதாபுரம்,சிதம்பராபு ரம், உதயத்தூர்,சௌந்தர பாண்டியபுரம், ஊராட்சி பகுதிகளில் ரூபாய் 2.10 கோடி மதிப்பிலான வளர்ச்சி திட்ட பணிகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத் தார்.

நெல்லை மாவட்டம் இராதாபுரம் ஒன்றியம் இராதாபுரம்,உதயத்தூர், சிதம்பராபுரம்,சௌந்தர பாண்டியபுரம்

ஆகிய 4 ஊராட்சி பகுதி களில் ரூபாய் 2.10 கோடி மதிப்பில் வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், இராதாபுரம் மேற்கு ஒன் றிய செயலாளர் ஜோசப் பெல்சி ஆகியோர் முன்னி லையில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்து பேசிய தாவது முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் தலை மையிலான அரசு ஏழை,எளிய மக்களுக்கு பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.மக்களின் அத்தி யாவசிய தேவைகளை பூர்த்தி செய்தும், மகளிர்க ளுக்கு கட்டணமில்லா பேருந்து வசதி,மகளிர்க்கு மாத ரூபாய் 1000 கலைஞர் உரிமைத்தொகை, மக் களை தேடி மருத்துவம், நம்மை காக்கும் 48 திட்டம், வருமுன் காப்போம் மருத் துவ திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு சுய தொழில் செய்திட தேவை யான சுழல்நிதி வழங்கி மக ளிர் வாழ்வில் எழுச்சியை ஏற்படுத்தி வருவது முதல மைச்சர் அவர்களின் தலைமையிலான"திராவிட மாடல்" ஆட்சியாகும் என்று கூறினார்.

பின்னர் பேரவை தலைவர் மு.அப்பாவு சட் டமன்ற தொகுதி வளர்ச்சி நிதியில் இராதாபுரம் அரசு தொழிற்பயிற்சி நிலையம் முன்பு ரூபாய் 13 லட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட பயணிகள் நிழற்குடை,இராதாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி வளாகத் தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட மூலம் ரூபாய் 11.75 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட நியாய விலை கடை கட்டிடம், பாப்பான்குளத்தில் ரூபாய் 11.75 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட அங் கன்வாடி மைய கட்டிடம் ஆகியவற்றை திறந்து வைத் தார்.

அதனைத் தொடர்ந்து இராதாபுரம் ஊராட்சி பகுதி குக்கிராமங்களில் வீடுகளுக்கு ரூபாய் 70.76 லட்சம் மதிப்பீட்டில் குடி நீர் இணைப்பு வழங்கும் பணியினை துவக்கி வைத் தும், பாப்பான்குளம் பாவி ரிதோட்டம் வழியாக கலைஞர் ஆட்சியில் இயக் கப்பட்டு கடந்த 10 ஆண்டு களாக நிறுத்தப்பட்ட வள் ளியூர்-ஆத்துக்குறிச்சி நகரப் பேருந்து சேவையை மீண் டும் துவக்கி வைத்தார். மாவட்ட ஊராட்சி நிதி யில் ரூபாய் 9.50 லட்சம் மதிப்பீட்டில் இராதாபுரம் வட்டார வளர்ச்சி அலுவல கம் முன் பயணிகள் நிழற் குடை அமைத்தல்,நெடு வாழியில் ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் நூலக கட்டி டம் அமைத்தல்,பட்டார் குளம் விலக்கில் ரூபாய் 5 லட்சம் மதிப்பீட்டில் பய ணிகள் நிழற்குடை அமைத் தல்,உதயத்தூரில் ரூபாய் 9.90 லட்சம் மதிப்பீட்டில் உடற்பயிற்சி மையம் அமைத்தல் ஆகிய பணிக ளுக்கு அடிக்கல் நாட்டி னார்.

உதயத்தூரில் தமிழ்நாடு சுகாதாரத்துறை மூலம் ரூபாய் 1.20 கோடி மதிப் பீட்டில் புதிதாக கட்டப்ப டயிருக்கும் ஆரம்ப சுகா தார நிலைய கட்டிட பணியினை துவக்கி வைத் தும், சிதம்பராபுரம் ஊராட்சி பகுதியில் ரூபாய் 36.96 மதிப்பீட்டில் வீடுக ளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகளையும் துவக்கி வைத்தார்.

சட்டமன்ற தொகுதி வளர்ச்சி நிதி மூலம் தலா ரூபாய் 8 லட்சம் மதிப்பீட் டில் சௌந்திரபாண்டியபு ரம் ஊராட்சி, இடையநயி னார்கும், வடக்கூர், சிதம்பராபுரம் ஊராட்சி, வையக்கவுண் டம்பட்டி ஆகிய ஊர்களில் புதிய நியாயவிலைக்கடை கட்டி டம் கட்டும் பணிகளையும் ஆக மொத்தம் ரூபாய் 2.10 கோடி மதிப்பிலான வளர்ச் சித்திட்ட பணிகளை பேரவை தலைவர் மு.அப் பாவு அவர்கள் முடிவுற்ற பணிகளை துவக்கி வைத் து,புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் துவக்கி வைத்தார்.

நிகழ்வில் சுகாதாரபணி துணை இயக்குநர் நேர்முக உதவியாளர் ரகுபதி, வட்டார வளர்ச்சி அலு வலர் பிளாரன்ஸ் விமலா, பொதுப்பணித் துறை உதவி செயற்பொறி யாளர் ஜெயந்தி, உதவி பொறியாளர் சாமு வேல்,ஒன்றிய அவை தலை வர் ராமையா,ஒன்றிய குழு உறுப்பினர்கள் பரிம ளம்,இசக்கிபாபு, முரு கன்,காந்திமதி,ஊராட்சி மன்ற தலைவர்கள் பொன். மீனாட்சி அரவிந்தன் (இராதாபுரம்) கந்தசாமி மணிகண்டன்(உதயத்தூர்) பேபி முருகன் (சிதம்பராபு ரம்)முருகேசன் (சௌந்தர பாண்டியபுரம்)பொன். இசக்கி (உருமன்குளம்)சர வணகுமார்(நவ்வலடி)

மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் முரளி, மாவட்ட பிரதிநிதி கோவிந் தராஜ், விவசாய சங்க தலை வர் ஐயப்பன், ஊராட்சி உறுப்பினர் பண்டாரம், அகஸ்டின், உதயத்தூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் மாசானம், பிரகா சபுரம் ஊராட்சி தலைவர் ராஜமிக்கேல்,இளையநயி னார்குளம் மூர்த்தி, தில்லைராஜா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில்

# அரியலூர் மாவட்டத்தில் 42 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், டிச. 18 - அரியலூர் மாவட்டம், தமிழ்நாடு அரசு போக்குவ ரத்துக் கழகம் (கும்ப) லிட், ஜெயங்கொண்டம் கிளை யில் ஓட்டுநர் மற்றும் நடத்து னர்களுக்கான குளிரூ ட்டப் பட்ட ஓய்வறையினை திறந்து வைத்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கும்பகோணம் கோட்டத் தில் பணிக் காலத்தில் உயிரி ழந்தவர்களின் வாரிசுதாரர் கள் 42 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நிய மன ஆணைகளை தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவ லர் ம.ச.கலைவாணி ஜெயங்கொண்டம் சட்ட மன்ற உறுப்பினர் க.சொ. க.கண்ணன் ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

ஜெயங்கொண்டம் அரசு போக்குவரத்துக் கழக கிளை யில் பணி நியமன ஆணை களை வழங்கி தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது : -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றது முதல் அர சுப் பணியில் பணியாற்றி பணிக்காலத்தில் இறந்தவர்க ளின் வாரிசுதாரர்களுக்கு பணி ஆணைகளை வழங்க வேண்டும் என உத்தர விட்டு, பல்வேறு துறைகளில் பணிகாலத்தில் இறந்தவர் களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணை வழங் கப்பட்டு வருகிறது. அந்தவ கையில் அரசு போக்குவ ரத்து கழகத்தில் பணி காலத்தில் இறந்துவிட்ட பணியாளர்களின் வாரிசு தாரர்களுக்கு படிப்படியாக பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு வருகிறது. முன்னதாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக கும்ப கோணம் கிளையில் 62 நபர் களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள் ளது. தற்போது நம்முடைய ஜெயங்கொண்டம் கிளை யில் இன்றையதினம் 42 நபர் களுக்கு கருணை அடிப்ப டையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள் ளது. இதன் மூலம் 104 நபர்க ளுக்கு கருணை அடிப்படை யில் பணி நியமண ஆணை கள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தியுள்ள மகளிர் கட்டணமில்லா பேருந்து பயண திட்டத்தின் மூலம் தான் போக்குவரத்துத் துறை மீண்டும் உயர்ந்த நிலை அடைந்து வருகிறது. இத் திட்டத்தில் 40 சதவீதமாக இருந்த மகளிர் பேருந்து பய ணம் தற்போது 60 சதவீத திற்கு மேல் எட்டியுள்ளது. இதற்கான பேருந்து கட்ட ணங்கள் தமிழ்நாடு முதல மைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் உத்தரவிடப் பட்டு தமிழக அரசின் சார் பில் வழங்கப்பட்டு வருகி றது. இதன் காரணமாக ரூ.2800 கோடி நிதியானது வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் போக்குவரத்து பணி யாளர்களுக்கு மாதாந்திர ஊதியம் முதல் தேதியில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத்திட் டத்தின் காரணமாக பெண் களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், அவர்க ளின் பொருளாதாரமும் முன்னேற்றம் அடைந்துள் ளது.

தமிழ்நாடு அரசு போக்கு வரத்துக்கழகத்தினை மேலும் மேம்படுத்தும் வகை யில் 1500 பேருந்துகள் பாடி கட்டும் பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டு, 400 பேருந்துகளின் பணிகள் முடிக்கப்பட்டு ள்ளது. மேலும், 2000 புதிய பேருந்து கள் வழங்க நிதியுதவி அளிக் கப்பட்டு 1666 பேருந்துக ளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இப் பேருந்துகள் வருகிற ஜனவரி மாதத்தில் நம்முடைய தமிழ் நாடு முதலமைச்சர் அவர்க ளின் பொற்கரங்களால் கொடிய சைக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்கள் பயன்பெறும் வகை யில் செல்ல உள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத் தில் தான் தனியாரிடமிருந்த பேருந்துகள் அரசுடைமை யாக்கப்பட்டது. அதன் கார ணமாகதான் இந்தியாவி லேயே தமிழ்நாட்டில்தான் கிராமங்கள் தோறும் பேருந்து இயங்கப்பட்டு வருகிறது. இதற்கு காரணம் தமிழ்நாட்டில் 21,000 பேருந் துகள் தொடர்ந்து இயக்கப் படுவதுதான். நமது அரசு போக்குவரத்து கழகம் இத்த கைய பேருந்துகளை இயக்கு வதான் காரணமாக ஏராள மான பொதுமக்கள் வேலைவாய்ப்பு, மருத்துவ தேவைகள் உள்ளிட்ட பல் வேறு தேவைகளை நிறை வேற்றிக்கொள்ள முடிகிறது. எனவே, இது தொடர வேண்டும் என்ற காரணத் தில்தான் இரவு, பகல் பாரா மல் உழைக்கும் ஓட்டுநர் மற் றும் நடத்துனர்கள் பயன்பெறும் வகையில் தீபா வளி பண்டிகையை முன் னிட்டு பணியாளர்களுக்கு எந்தவித கோரிக்கையுமின்றி 20 சதவீதம் போனஸ் தமிழ் நாடு முதலமைச்சர் அவர் களால் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னையில் தற்போது பெய்த கனமழை யினால் பாதிக்கப்பட்ட இடங்களில் நீரின் அளவா னது குறைந்த உடன் பேருந்து போக்குவரத்துகள் வழங்கப்பட்டு அதன் மூலம் மக்கள் தங்கள் அன்றாடத் தேவைகளை பயமின்றி மேற்கொண்டனர். இத்த கைய சிறப்பான சேவை களை நமது அரசு போக்குவ ரத்து கழகம் மேற்கொண் டுள்ளது இவ்வாறு அமைச் சர் சா.சி.சிவசங்கர் பேசி னார்.

இந்நிகழ்ச்சிகளில் தமிழ் நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டம் மேலாண் இயக் குனர் ஆர்.மோகன், திருச்சி ராப்பள்ளி மண்டல பொது மேலாளர் எஸ். சக்திவேல், முதுநிலை துணை மேலாளர் கோவிந்தராஜ், பொது மேலாளர் நாசர், துணை மேலாளர்கள் சதீஷ்குமார், ரங்கராஜன், கார்த்திகேயன், ராமநாதன், ஜெயங்கொண் டம் கிளை மேலாளர் ராம்கு மார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ர மணியன், மாவட்ட துணைச் செயலாளர் மு.கணேசன், மாவட்டப் பொருளாளர் கு.இராஜேந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் தன சேகர், இரா.மணிமாறன், பூ.செல்வராஜ், வா. சௌந்த ரராஜன், ரெங்க.முருகன் நகர கழகச் செயலாளர் வெ.கொ.கருணாநிதி, மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே. சி.லூயிகதிரவன், பொதுக் குழு உறுப்பினர் வி.எம். ஷாஜகான், மாவட்ட மாண வரணி அமைப்பாளர் எஸ். ஆர்.இராமராஜன், மாவட் டச் நெசவாளர் அணி அமைப்பாளர் தங்க.ராமகி ருஷ்ணன், மாவட்ட தக வல்தொடர்பு அணி அமைப் பாளர் குலோத்துங்கன், நகர கழக நிர்வாகிகள் ஞானபிர காசம், எஸ்.ராஜமாணிக்கம், மு.முரசொலிகுமார், பா.ரமேஷ், கொளஞ்சி யப்பா, கு.பிரபாகரன், மா.செ.செந்தில்குமார், நகர இளைஞரணி அமைப்பாளர் ஆ.கரிகாலன், தொ.மு.ச. நிர் வாகிகள் டி. சேகர், பி.வி. அன்பழகன், கொளஞ்சி, இளங்கோவன், செல்வம், பட்டுசெல்வம், குமார், கணேசன், சுப்ரமணியன், இரவிச்சந்திரன், ஜெய்சங் கர், சங்கர், விஜயன், குமர வேல், பாலா, ஸ்ரீராம் மற் றும் தொழிற்சங்க பிரதிநிதிகள், அலுவலர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

---

தொழிலகப் பாதுகாப்புத்துறை –

# தொழிலாளர் துறையில் கருணை அடிப்படையில் பணி நியமனங்கள்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்!

சென்னை, டிச. 18 - தொழிலாளர் துறை மற் றும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கத் துறையில் கருணை அடிப்ப டையில் பணி நியமனங்கள் வழங்கப்பட்டன.

தொழிலாளர் துறை மற் றும் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத் தில் பணியில் இருந்த போது இறந்த அரசுப் பணியாளர் களின் வாரிசுதாரர்களுக்கு விதிகளின் படி அவர்களது விண்ணப்பங்கள் பரி சீலனை செய்யப்பட்டு, தகு திக்கேற்ப கருணை அடிப் படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு வருகிறது.

தொழிலாளர் நலன் மற் றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி. வெ.கணேசன் 15.12.2023 அன்று 6 வாரிசுதாரர்க ளுக்கு கருணை அடிப்படை யில் முறையே 5 நபர் களுக்கு இளநிலை உதவியாளர்களாகவும், 1 நபருக்கு பதிவுறு எழுத்தரா கவும் (1.செல்வி. பா. சோபிகா 2. திருமதி. ஆர். கலாமணி, 3. க. விஜய், 4. ச.இசக்கிமுத்து, 5. ஆ.நாக ராஜா, 6. லா.டேவிட்) பணி நியமன ஆணை வழங்கி னார்.

இந்நிகழ்ச்சியில் தொழி லாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடு தல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் துறை ஆணையர் அதுல் ஆனந்த், கூடுதல் தொழிலா ளர் ஆணையர் (நிர்வாகம்) திருமதி. சி.ஹேமலதா, தொழிலாளர் துணை ஆணையர் (பணிக்குழு மற் றும் பொது) தே.விமலநா தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

மானாமதுரையில் வேலை வாய்ப்பு முகாம்!

# 362 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஆணை!

## திருமதி தமிழரசி எம். எல். ஏ. வழங்கினார்

சிவகங்கை. டிச. 18 - சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டினை முன் னிட்டு மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கம் மற் றும் மாவட்ட வேலை வாய்ப்பு பயிற்சி துறையின் சார்பில் ஒக்கூர் வெள்ளை யன் செட்டியார் மேல்நி லைப் பள்ளியில் மாவட்ட வருவாய் அலுவலர் மோக னசுந்தரம் தலைமையில் வேலைவாய்ப்பு சிறப்பு முகாம் நடைபெற்றது. முகாமில் 1273 பேர் பதிவு செய்திருந்தார்கள். இதில் 362, நபர்களுக்கு பணிக் கான ஆணை வழங்கப்பட் டது. 85 நபர்கள் இரண்டா வது கட்ட பதவி உயர்விற்கு தேர்வு செய்யப்பட்டார் கள். இந்த பணி நியமன ஆணைகளை வழங்கி மானாமதுரை தொகுதி சட் டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி ரவிக்குமார் சிறப் புரை ஆற்றினார். இந்த நிகழ்ச்சியில் மானாமதுரை நகர மன்ற தலைவர் எஸ் .மாரியப்பன் கென்னடி, ஒன்றிய குழுத் தலைவர் திருமதி லதா அண்ணா துரை ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன்,,ஒன்றியக்குழு துணைதலைவர் முத்துசாமி, வேலைவாய்ப்புதுறை அலு வலர்கள் மணி கணேஷ், ராஜலட்சுமி, வட்டாட்சி யர் ராஜா, மானாமதுரை நகர்கழக செயலாளர் க.பொன்னுச் சாமி, நிர்வா கிகள் மயில்வாகனன், ரவிச் சந்திரன், முருகன்,மகளிரணி வளர்மதி, அழகேசன், சிவ நேசன், கண்ணன், மன்னர் மன்னன், தேசிங்கு ராஜா, தலைமை. ஆசிரியர் எல். முருகன், ஆகியோர் கலந்து கொண்டார்கள். மாவட் டம்முழுவதிலுமிருந்து ஏரா ளமான இளைஞர்கள் முகா மில் கலந்து கொண்டார்கள். முன்னதாக மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்கு னர் வானதி வரவேற்றுப் பேசினார்.

---

# குற்றாலம் அருவிகளில் கடும் வெள்ளப்பெருக்கு:

தென்காசி, டிச.18- ஐந்தருவியில் அனைத்து கிளைகளிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது.

வெள்ளப் பெருக்கு ஏற் பட்டுள்ள பகுதிகளில் பொதுமக்கள் யாரும் செல்ல வேண்டாம் என வும் மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவுறுத்தப்பட் டுள்ளது.

வளிமண்டல கீழடுக்கு சுழற்சியின் காரணமாக கனமழை பெய்யக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது.

தென்காசி மாவட்டத் தில் நேற்று காலை முதல் பரவலாக மழை பெய்ய தொடங்கிய நிலையில் குற் றால அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரிக்க தொடங் கியது.

இருப்பினும் பெரிய வெள்ளம் ஏற்படாததால் காலை 10 மணி வரையில் சுற்றுலா பயணிகள் மற்றும் ஐயப்ப பக்தர்கள் அனைவரும் அருவிகளில் குளிக்க அனுமதிக்கப்பட் டிருந்தனர்.

அதன் பின்பு மழைப் பொழிவு தொடர்ந்து அதி கரித்ததால் மெயின் அருவி, பழைய குற்றாலம், ஐந்தரு வியில் காட்டாற்று வெள் ளத்தால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

ஐந்தருவியில் அனைத்து கிளைகளிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. பழைய குற்றாலத்திலும் வெள்ளப்பெருக்கு மற்றும் மெயின் அருவியில் பாது காப்பு வளைவை தாண்டி பெருவெள்ளம் ஏற்பட்ட தால் சுற்றுலா பயணிகள், ஐயப்ப பக்தர்களுக்கு உட னடியாக குளிக்க தடை விதிக்கப்பட்டது.

மேலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ள பகுதிகளில் பொதுமக்கள் யாரும் செல்ல வேண்டாம் எனவும் மாவட்ட நிர்வா கம் சார்பில் அறிவுறுத்தப் பட்டுள்ளது.



சிவகங்கை நகர் தி.மு.க. மற்றும் பார்வை இழப்பு தடுப்பு சங்கத்தின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு மதுரைவேலம்மாள் கண் மருத்துவமனை சார்பில் நடைபெற்ற இலவச கண்மருத்துவ முகாமினை சிவகங்கை நகர்மன்றத்தலைவர் சி.எம்.துரைஆனந்த் தலைமையேற்று துவக்கி வைத்தார்.

---

அண்ணா அறிவாலயம் – ஊழியர்

# ஆ.கார்த்திகேயன் தந்தை ஆதிகேசவலு மறைவு!

## அன்பகம் கலை - டி.கே.எஸ்.இளங்கோவன் அஞ்சலி

சென்னை, டிச. 18- அண்ணா அறிவாலயம் ஊழியர் ஆ. கார்த்திகேய னின் தந்தை ஆதிகேசவலு அவர்கள் (வயது 83) அவர் கள் நேற்று (17.12.2023) காலை இயற்கை எய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழக இணை அமைப்புச் செயலா ளர் அன்பகம் கலை, கழக செய்தித் தொடர்பு தலை வர் டி.கே.எஸ். இளங்கோ வன், தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா, அண்ணா அறிவா லய மேலாளர் ஆர். பத்மநா பன், துணை மேலாளர் என். ஜெயக்குமார் உட்பட கழக முன்னணியினர், தோழர் கள், கழக நிர்வாகிகள் திர ளாகச் சென்று மறைந்த ஆதிகேசவலு அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி தந்தையை இழந்து வாடும் கார்த்திகேயனுக்கு ஆறுதல் கூறினர்.

மறைந்த ஆதிகேசவலு அவர்களின் இறுதி ஊர்வலம் அவரது இல்லத்தில் இருந்து (8/18, துரைப் பிள்ளைத் தெரு, ஸ்ரீ சக்தி தெரு, அரும்பாக்கம், புறப்பட்டு அரும்பாக்கம் இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.



கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, சிவகங்கை மாவட்ட நிர்வாகம்,மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் தனியார் வேலைவாய்ப்பு முகாமினை மானாமதுரை பள்ளியில் தொடங்கி வைத்து இதில் தேர்வு பெற்றவர்களுக்கு வேலைக்கான ஆணைகளை முன்னாள் அமைச்சர், ஆ.தமிழரசி எம்.எல்.ஏ. வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அலுவலர்கள் மோகனசந்திரன், வானதி, கணேஷ்மூர்த்தி, ராஜலட்சுமி, ராஜா, ஒன்றிய பெருந்தலைவர் லதா, நகர்மன்ற தலைவர் மாயப்பன் கென்னடி, ஒன்றிய கவுன்சிலர் அண்ணாதுரை, தலைவர் முத்துசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன், நகர் கழக செயலாளர் பொன்னுசாமி, மயில்வாகனன், திருமுருகன், வளர்மதி, அழகேசன், சிவனேசன், கண்ணன், மன்னர் மன்னன், தேசிங்குராஜா, அரசு துறை அலுவலர்கள், கலந்து கொண்டனர்.